# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :– | S.C.No. 98/2018 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :– | அ.சா–05 (PW–05) |
| பெயர் | :– | தங்கராஜ் |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :– | |
| ஊர் | :– | |
| வருவாய் வட்டம் | :– | |
| சமூகம் (சாதி) | :– | |
| தொழில் | :– | |
| மதம்/சமயம் | :– | |
| வயது | :– | |

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரிகள் தோன்றினர். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:–**

நான் ஓமலூர் வட்டம், கோட்டகவுண்டபட்டி ஊரில் வசிக்கிறேன். நான் ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இரவுக் காவலராக பணியாற்றி ஓய்வுபெற்றுள்ளேன். சுமார் 20 ஆண்டுகளுக்குமுன் ஒரு நாள் நான் இரவு பணிக்குச் சென்றபோது துணை வட்டாட்சியர் ஒரு மூட்டையை கொடுத்து காவல் நிலையத்தில் வைத்துவிட்டு வருமாறு சொன்னார். நானும் எழுத்தர் ராஜா என்பவரும் அந்த மூட்டையை காவல் நிலைத்தில் கொடுத்துவிட்டு வந்தோம். அவற்றை காவல் துறையினர் மகசரில் கைப்பற்றினார். அதில் நானும் ராஜாவும் சான்றொப்பம் இட்டோம். கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ–04** ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

நான் வேலைக்கு மாலை 05.00 மணிக்கு சென்று காலை 09.00 மணிக்கு பணியில் இருந்து செல்வேன். வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் இதர பணியாளர்கள் மாலை 06.00 மணிக்குள் சென்றுவிடுவர் என்றால் சரிதான். மூட்டையில் என்ன இருந்தது என்று எனக்குத் தெரியாது. நான் கையொப்பம் இட்டத் தாளில் என்ன இருந்தது என்று எனக்குத் தெரியாது. காவல் துறையினர் கேட்டனர். நான் போட்டேன். நான் அரசு அலுவலராக இருந்ததால் வாட்டாட்சியர் கேட்டதற்கு இணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.